2004 பிப்ரவரி 5]

12—

கரும்பு விவசாயிகளுக்குப் பணம் வழங்குதல்

***1864–திரு. கோ. இரவிராஜ்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குக் கரும்பு அனுப்பி, அதற்குரிய பணத்திற்காகக் காத்திருக்கும் விவசாயிகளின் நிலை அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு எப்பொழுது பணம் வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 2000–2001, 2001–2002 மற்றும் 2002–2003 ஆகிய அரவைப் பருவங்களுக்குக் கரும்பு வழங்கிய அனைத்து விவசாயிகளுக்கும் கரும்புக் கிரயம் நிலுவையின்றி வழங்கப்பட்டு விட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குக் கரும்பு கொடுத்த விவசாயிகளுக்கு இதுவரையிலே பணம் பட்டுவாடா செய்யப்படாமல், அந்த விவசாயிகள் எல்லாம் மிக்க வேதனையிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். அரசுத் தரப்பிலே பட்டுவாடா செய்யப்படும் என்று பலமுறை அறிவித்தும்கூட, இதுவரையிலே வழங்கப்படவில்லை. ஆகவே, விரைவாக அந்த விவசாயிகளுக்குக் கரும்புப் பணம் பட்டுவாடா செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக கரும்பு விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டதற்கிணங்க, தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கரும்பு ஆலைகளிலும் கரும்பு விவசாயிகளுக்குப் பணம் நிலுவையின்றி

வழங்கப்பட்டு விட்டது; நேற்று வரை நிலுவையின்றி வழங்கப்பட்டு விட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஆர். சாமி.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கரும்பு விவசாயிகளுக்குப் பணம் பட்டுவாடா செய்யப்பட்டதாகக் கூறினார்கள். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு விவசாயிகளின் மேல் அக்கறை கொண்ட அரசு. என்னுடைய மதுரை மாவட்டத்திலே ஒரே ஒரு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை இருந்தது. அங்கு கரும்பு அனுப்பிய விவசாயிகளுக்கு இதுவரை பணம் ஒன்றும் கிடைக்கவில்லை. அந்த மில்லும் ஓடவில்லை. அந்த மில்லை ஓட்டுவதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாக் கரும்பு விவசாயிகளுக்கும் நிலுவையின்றிப் பணம் வழங்கப்பட்டு விட்டது என்பதை ஏற்கெனவே தெரிவித்திருந்தேன். அந்தச் சர்க்கரை ஆலை நஷ்டத்திலே இயங்கியதால் அது மூடப்பட்டு விட்டது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 13, திரு. வீ. சந்திரன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

13–

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கிராபைட் தொழிற்சாலை

***22523–திரு. வீ. சந்திரன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

சிவகங்கை, கோமாளிப்பட்டி கிராபைட் தொழிற்சாலைக்குப் போதிய நிதி ஒதுக்கீடு செய்து சீரமைக்க அரசு முன்வருமா?